# 1200 MW அனல்மின் நிலையத்தை வாங்குவதற்கான ஒப்பப்புள்ளிக்கான அழைப்பு - திருத்தம்

# CORRIGENDUM - INVITATION FOR BIDS FOR ACQUISITION OF OWNERSHIP OF 1200 MW THERMAL POWER PLANT

தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட்டத்தில் கோஸ்டல் எனர்ஜன் பிரைவேட் லிமிடெட் **"(கம்பெனி/நிறுவனம்)"** நிலக்கரி மூலம் இயங்கும் **1200MW (2x600MW)** திறன் கொண்ட அனல் மின் நிலையத்தை இயக்கி வருகிறது. இந்த நிறுவனத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை சரி செய்ய ஏதுவாக பாரத ஸ்டேட் வங்கியின் (கடன் வழங்கியோர்) தலைமையிலான கடன் வழங்கியோர் கூட்டமைப்பானது, இந்த நிறுவனத்தின் சமவீத பங்கு மூலதனத்தில் குறைந்தது 51% (ஐம்பத்து ஒன்று விழுக்காடு) பாகத்தை போட்டி ஒப்பப்புள்ளி நடைமுறையின் மூலமாக **(ஒப்பப்புள்ளி நடைமுறை) விற்க (divest**) முடிவு செய்து அதற்காக கடன் வழங்கியோருக்கு உறுதுணை புரிந்து அறிவுரை அளிப்பதற்காக எஸ்பிஐ கேப்பிடல் மார்க்கெட்டர்ஸ் லிமிடெட் - ஐ நியமித்தது.

மேற்குறிப்பிட்டதைத் தொடர்ந்து பாரத ஸ்டேட் வங்கி மற்றும் எஸ்பிஐ கேப்ஸ், கடன் வழங்கியவர்களின் சார்பில் ஒப்பப்புள்ளி நடைமுறையில் பங்கேற்பதற்காக போதுமான தொழில்நுட்ப மற்றும் நிதி ஆற்றல் கொண்டுள்ள முதலீட்டாளர்களிடமிருந்து / முதலீட்டாளர்கள் கூட்டமைப்பிடமிருந்து உத்தேச திட்ட வரைவுகளை (அதாவது ஒவ்வொன்றும் ஒரு **ஒப்பப்புள்ளி)** வரவேற்கும் விளம்பரங்களை **(விளம்பரம்) அக்டோபர் 30, 2018** அன்று வெளியிட்டது.

ஒப்பப்புள்ளி நடைமுறை மற்றும் விளம்பரத்தின் பகுதி மாறுபாடு காரணமாக, விருப்பமுள்ள அனைவரும் பின்வரும் விவரத்தை கவனத்தில் கொள்ளவும். ஒப்பப்புள்ளி சமர்ப்பித்தல் தேதி / நேரம் - நவம்பர் 13, 2018 அன்று மதியம் 2.00 மணி (இந்திய நேரம்) என்பது **நவம்பர் 28, 2018 அன்று மதியம் 2.00 மணி** என்பதாக **(ஒப்பப்புள்ளி கெடுதேதி)** நீட்டிக்கப்பட்டுள்ளது. ஒப்பப்புள்ளி ஆவணத்தில் வரையறுக்கப்பட்ட விதிமுறைகளின் படி, ஒப்பப்புள்ளி ஆவணத்தை மூடப்பட்ட உறையில் இட்டு **"Ms. Rajrajeswari Mishra, Vice President, SBI Capital Markets Limited, 202, Maker Tower E, Cuffe Parade, Mumbai 400005, Maharashtra, India"** - என்ற முகவரியில் நவம்பர் 28, 2018 தேதியன்று மதியம் 2.00 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். அனைத்து அண்மைத் தகவல்கள், சேர்த்தல்கள், மாற்றங்கள், திருத்தம், ஒப்பப்புள்ளி நடைமுறை பற்றிய தகவல்கள் ஆகியவற்றை அறிய அவ்வப்போது பின்வரும் இணையதளங்களை தொடர்ந்து பார்த்து வரவும் **https://www/sbicaps.com/index.php/whats-new** அல்லது **www.sbi.co.in**

ஏதேனும் சந்தேகங்களுக்கு தொடர்பு கொள்க

| தொடர்பு கொள்ள வேண்டிய அதிகாரி | தொலைபேசி எண் | |
|---|---|---|
| திரு. பவானி சங்கரன் அவர்கள் (AGM, SBI) | +91 22 2217 7540 | agm1infra1.sarg@sbi.co.in |
| திருமதி. ராஜ்ராஜேஸ்வரி மிஸ்ரா அவர்கள் (VP, SBICAPS) | +91 22 2217 8313 | rajrajeswari.mishra@sbicaps.com |

SBI

SBI Capital Markets Limited

*குறிப்பு: இந்த விளம்பரம், எஸ்பிஐ கேப்ஸ் அல்லது கடன் கொடுத்தவர்களின் சார்பாக எந்தவிதமான உறுதிமொழி ஆகாது மற்றும் உறுதிமொழியாக கருதப்படாது. எஸ்பிஐ கேப்ஸ் மற்றும் கடன் கொடுத்தவர்களுக்கு, செயல்முறையிலிருந்தும் அல்லது அதன் எந்தவொரு பகுதியிலிருந்தும் விலகிக் கொள்ளும் / தற்காலிகமாக நிறுத்தி வைக்கும் / ரத்து செய்யும், செயல்முறையின் எந்த கட்டத்திலும் எந்தவொரு/ அனைத்து விண்ணப்பத்தை (விண்ணப்பங்களை) பெற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் மற்றும்/அல்லது செயல்முறையை அல்லது அதன் எந்த பகுதியையும் மாற்றியமைக்கும் அல்லது எந்தவொரு விதியையும் எந்தவொரு காரணமுமின்றி, எந்தவித கட்டுபாடுமின்றி மாற்றும் உரிமை உள்ளது. இது ஒரு ஆஃபர் டாகுமென்ட் அல்ல. இந்த விளம்பரம், ஒப்பப்புள்ளி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி உரிமைத் துறப்புகள் மற்றும் வரம்புகளுக்கு உட்பட்டது.*